**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.284/2009**

Deposition of **D.W.3** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A.Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.09.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : செல்வமணி Father's Name : நடேசன்

துவக்க நேரம் : 12.55 P.M.

**2, 3 வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. 1-ஆம் வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் ஏற்படுத்திக் கொண்ட கிரய உடன்படிக்கை ஆவணத்தில் (வா.சா.ஆ.1) நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான், ஆனால் எனக்கு தெரியும். பெரியேரி கிராமத்தில் எனது நிலம் 1-ஆம் பிரதிவாதியின் நிலத்திலிருந்து சுமார் 1 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். நத்தக்கரை கிராமம் எனது ஊரிலிருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான்.

2. 1-ஆம் வாதி வெங்கடாஜலம் வட்டிக்கு பணம் கொடுப்பவர் என்ற விவரத்தை 1-ஆம் பிரதிவாதி கூறியதன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் இல்லை, எனக்கு நேரடியாகவே தெரியும். 1-ஆம் பிரதிவாதி பெருமாள், அழகுவேல், தங்காயி, பிச்சமுத்து ஆகியோர்களிடம் ரூ.40,000/- கடன் வாங்கிக் கொண்டு அவரது சொத்தை கடனுக்காக கிரய ஒப்பந்தம் செய்து கொடுத்தார் என்று கூறியுள்ள பட்சத்தில் மேற்படி பத்திரத்தை நேரடியாக நான் பார்த்தேனா என்றால் பத்திரம் எழுதியது எனக்கு தெரியாது, ஆனால் பணம் 2007-ஆம் ஆண்டு கொடுத்தது எனக்கு தெரியும்.

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.284/2009, Dt.04.09.2025.

3. அழகுவேல், தங்காயி, பிச்சமுத்து ஆகியோர்கள் 1-ஆம் பிரதிவாதியிடம் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். பிச்சமுத்து என்பவரிடம் வாங்கிய கடனை தீர்ப்பதற்காக 1-ஆம் பிரதிவாதி, 1-ஆம் வாதியிடம் கடன் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு எந்த தேதியில் 1-ஆம் பிரதிவாதி கடன் வாங்கினார் என்றால் தேதி, மாதம் நினைவிலில்லை, ஆனால் 2007-ஆம் ஆண்டு வாங்கினார்.

4. 1-ஆம் வாதியிடம், 1-ஆம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரய ஒப்பந்தப்பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக கடனுக்காக பத்திரம் எழுதும் பொழுது ஆதார குதவை பத்திரமாகத்தான் எழுதுவார்கள் என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளவாறு 1-ஆம் வாதி, 1-ஆம் பிரதிவாதியிடம் கடன் வாங்கியதற்காகத்தான் கிரய ஒப்பந்த பத்திரத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்ற விவரம் வா.சா.ஆ.1 ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல.

5. 1-ஆம் பிரதிவாதி, 1-ஆம் வாதியிடம் கடன் வாங்கி 2 வருடங்கள் கழித்து கடனை திருப்பி கொடுக்க தயாராக இருந்தார் என்ற விவரம் 1-ஆம் பிரதிவாதி கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதி பெருமாள் எனக்கு நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். 1-ஆம் வாதி வெங்கடாஜலம் தான் கொடுத்த கடனுக்கு 10% வட்டி கேட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள நிலையில் அது தொடர்பாக 1-ஆம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை.

6. 1-ஆம் பிரதிவாதி கடனை 1-ஆம் வாதியிடம் திருப்பிக் கொடுக்க தயாராக இருந்தது குறித்து வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் கொடுத்தாரா என்றால் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. பெரியேரி கிராமத்தில் 1-ஆம் பிரதிவாதியும், 1-ஆம் வாதியும் பைசல் தொடர்பாக பஞ்சாயத்து பேசியதாக கூறியுள்ளது எந்த தேதியில் என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை,

ஆனால் பைசல் தொடர்பாக பேசினார்கள்.

7. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1-ஆம் வாதி வெங்கடாஜலம் வீட்டிற்கு சென்று பஞ்சாயத்து பேசியதாக கூறியுள்ள நிலையில் தேதி தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை, ஆனால் 1-ஆம் வாதி வீட்டிற்கு நேரில் சென்று பேசினோம். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளதுபோல் எந்த பஞ்சாயத்து பைசல் நடைபெறவில்லை என்றாலும், நான் 1-ஆம் பிரதிவாதியின் நெருங்கிய நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. வா.சா.ஆ.1 ஆனது கடனுக்காக எழுதப்பட்டதல்ல என்றாலும், 1-ஆம் பிரதிவாதியின் நிலத்தை விற்கும் எண்ணத்தில் ஏற்பட்டது என்றாலும், நான் 1-ஆம் பிரதிவாதியின் நண்பர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் பிரதிவாதிகள் கூறியதன் பேரில் தயார் செய்தது என்றால் சரியல்ல.

2, 3 வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

4-ஆம் வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 01.17 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.284/2009, Dt.04.09.2025.